ஸ்ரீ ராமாநுஜன் 360

ஆசிரியர்:
மஹாமஹோபாத்யாய ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
மஹாவித்வான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

தொகுதி 30 | காளயுக்திஷு சித்திரைமீ 10—5—1978 | பகுதி—11

பத்திரிகையாசிரியரின் விண்ணப்பம்

நமது தமிழ்நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள் – தினசரிப்பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், மாதப்பத்திரிகைகள் எனப் பலவகையாகவுள்ளன இவற்றுள் ந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீரங்கநாதபாதுகா, ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம், (நமது) ஸ்ரீராமாநுஜன் என்கிற நான்கு பத்திரிகைகள் மட்டுமே மாதாந்தப் பத்திரிகைகளாகவும் வைதிக பத்திரிகைகளாகவும் பரிகணிக்கக்கூடியவையாயுள்ளன. நாமறியாமல் இன்னும் சில பத்திரிகைகளும் இருக்கலாம். மேலே குறித்த மாதப்பத்திரிகைகள் நான்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் அபிவிருத்திக்காகவே பாடுபடும் பத்ரிகைகளாதலால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் ஸௌஜந்யமும் ஸௌமநஸ்யமும் ஓங்கிவளருவதையே முக்கியமான குறிக்கோளாகக்கொண்டு போருவது நலமல்லவா? அடியேன் ஸ்வயமாக ஒரு விவாதத்தையும் கிளப்புவது கிடையாது. பிறர் கிளப்புவதை உபேக்ஷித்திருக்குமியல்பு உடையேனல்லேன். ஸ்ரீமதுபயவே. (திருநாமத்தை யெழுத விரும்புகின்றிலேன்.) ஸ்வாமிக்கு லோகாபிராமமான விஷயங்களை யெழுதுவதில் பரிசயமுமில்லை, சிரத்தையுமில்லை. "எந்த அஜ்ஞானத்திற்கும் மருந்துண்டு, ஸ்வாஜ்ஞாந அஜ்ஞானத்திற்கு மருந்தே கிடையாதென்று



பெரியார் ஸாதிப்பதுண்டு. அதை நினைவூட்டுமவர்கள் எதையேனும் எழுதிக் கொண்டிருக்கட்டும். *செயல் நன்ருகத் திருத்திப்பணிகொள்வதற்கே திருவவதரித்த ஆழ்வாரும் *ஆராஞனுமாதானும் செய்ய, அகலிடத்தை யாராய்ந்து அது திருத்தலாவதே!* என்றருளிச் செய்யக் காண்கிறேம். எம்பெருமாஞருத்ஸவமும், (அது முடிந்த மறு நாளே) நம்மாழ்வாருத்ஸவமும் பேரின்பவெள்ளமாக அநுபவிக்க ப்ராப்தமாகிறது. யாவரும் ஆனந்தமாக அநுபவிக்கக்கூடிய விஷயங்களை உபஹரிக்கிறேம் இங்கு.

விவாத விஷயங்களாக எழுதப்படுமவை பெரும்பாலும் சாஸ்த்ரார்த்த விமர்சங்களாகஇருப்பதனல் அப்படிப்பட்ட விஷயங்களுள்ள ஏடுகளைப் பலர் பார்ப்பதேயில்லை. தள்ளிவிடுகிருர்கள். ''எங்களுக்கு இவ்விஷயங்கள் ஒன்றும் புரியவில்லையே'' என்றும் பலர் எழுதுகிருர்கள் மதுராந்தகம் ஸ்வாமி தமது ஸ்ரீரங்க ஸ்ரீவிவேசனத்தில் எழுதுகிருர்—''தேசிகனுக்குத் திருப்ரதிஷ்டை எங்கெங்கு நடக்கிறதோ, அங்கங்கே அதற்குத் தடைசெய்யவேணு மென்பது தென்கலையார் ஸித்தாந்தம்'' என்று. எந்தெந்த கோவில்களில் தேசிகதிவ்ய மங்கள விக்ரஹம் இற்றைக்கு விளங்கா நின்றதோ, அதெல்லாம் தென்கலையார் செய்வித்த திருப்ரதிஷ்டையே—என்கிற உண்மையை யறிய அந்தோ இவர்க்கு பாக்யமில்லையே! திருவல்லிக்கேணி, திருவிந்தளூர், ஸ்ரீபெரும்பூதூர், கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திவ்ய தேசங்களில் ஸேவைஸாதிக்கிற தேசிக திவ்ய மங்கள விக்ரஹங்கள் யாருடைய திருப்ரதிஷ்டை? என்பதை இவர் அறிவரா? 1800வது வருஷத்திற்குமுன் இவர்கள் எங்கிருந்தார்கள்? எப்படி யிருந்தார்கள்? என்பதை எத்தனை தடவை விவரிப்பது! போதும் போதும். இப்போது இனிய விஷயங்களை வாசியுங்கள். ...

புராணங்களின் பெருமை

உலகில் வித்வான்களாயுள்ளவர்கள் புராணங்களில் அவ்வளவாக மதிப்புக் கொள்வதில்லை. சிலர் புராண ப்ரவசனம் பண்ணிஞல் அவர்களை 'ஏதோ புராணம் சொல்லுபவர், கதை சொல்லுபவர்' என்று லகுவாகப் பேசிவிடுவதுமுண்டு. புராணங்களில் அவகாஹனம் சில பாக்யவான்களுக்கே விளையுமது. காடகச்ருதியில் ''இதிஹாஸ புராணஞ்ச.........ஸர்வாஸ் தா:'' என்று ஓதப்பட்டிருப்பதால் இதிஹாஸ புராணங்கள் வேதம்போல் நித்யமென்று கொள்ளக் குறையில்லை. *இதிஹாஸ புராணப்யாம் வேதம் ஸமுப ப்ர்ம்ஹயேத்* என்கிற வசனம் ப்ரஸித்தம். இதிஹாஸ புராணநபிஜ்ஞர்களை அல்பச்ருதர்களென்று ஓதுக்குகின்றது சாஸ்த்ரம். வேதங்களுக்கு வியாக்கியானம் ஆவச்யகம் என்று கருதிய மஹர்ஷிகள் பராவர தத்வங்களைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கண்டு பரம காருணிகர்களாய் பகவானுடைய ப்ரேரணைகொண்டே ஸ்ம்ருதி—இதிஹாஸ—புராணங்களை இயற்றிஞர்கள். அவற்றுள் ஸ்ம்ருதிகள் வேதத்தின் பூர்வபாகமான கர்ம காண்டத்திற்கு உபப்ர்ம்ஹணங்களாய்த் தோன்றியவை. மநு அத்ரி யாஜ்ஞவல்கிய பராசர பாராசர்யாதி மஹர்ஷிகள் இயற்றிய தரும சாஸ்த்ரங்களென்னுமவையே ஸ்ம்ருதிகளாம். இதிஹாஸ புராணங்கள் வேதத்தின் உத்தரபாகமான உபநிஷத்துக்களுக்கு [வேதாந்தத்திற்கு] உபப்ர்ம்ஹணமாய்த் தோன்றியவை. *ப்ராயேண பூர்வ பாகார்த்த வர்ணநம் தர்மசாஸ்த்ரத:,

இதிஹாஸபுராணப்யாம் வேதாந்தார்த்த: ப்ரகாச்யதே* என்றது காண்க. கர்ம காண்ட வியாக்கியானமான ஸ்ம்ருதிகளிற் காட்டிலும் ப்ரஹ்மகாண்ட வியாக்கியான மான இதிஹாஸ புராணங்கள் மிகச் சிறந்தவை யென்று தன்னடையே தேறும்.

இப்போது புராணப்பெருமை சொல்லப்படுகிறது. ஸர்க்கம்–ப்ரதிஸர்க்கம்–வம்சம்–மந்வந்தரம்—வம்சாநுசரிதம் என்னுமிவற்றை ப்ரதிபாதநம் செய்யுமவை புராணங்கள். இவற்றுள் ஸர்க்கமாகவது ஸத்வாரகமாவும் அத்வாரகமாகவும் நடக்கிற ஜகத்ஸ்ருஷ்டி. ப்ரதிஸர்க்கமாவது—நித்ய நைமித்திக ப்ராக்ருத ரூபமான ப்ரலயம். ஸ்தூல சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மமானது ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மமாகும் நிலை அது வம்சமாவது—ஆதிஸ்ருஷ்டியில் ப்ரவ்ருத்தர்களான மஹாபுருஷர்களின் ஸந்தானவரிசைகள். மந்வந்தரங்களாவன — நான்முகனாலே ஸ்ருஷ்டிவ்யாபாரத்தில் அதிகரிக்கும்படி செய்யப்பட்ட ஸ்வாயம்புவ ஸ்வாரோ திஷாதிகளின் வியாபாரம். வம்சாநுசரிதமாவது—சில புண்யச்லோகர்களின் சரித்ராநுவர்ணநம். இதிஹாஸங்களின் பரிஸ்திதி இப்படிப்பட்டதன்று. புராணங்கள் வைஷ்ணவ நாரதீய பாகவதாதிகளாகப் பதினெட்டு மஹாபுராணங்களெனப்படும். வேறுபல உபபுராணங்களுமுள்ளன. இவையெல்லாம் கல்ப பேதத்தாலே ஸத்வ ரஜஸ் தம ப்ராசுர்யம் காரணமாக ஸாத்விக ராஜஸ தாமஸ வ்யபதேசங்களை யடைகின்றன. பாத்மத்தில்

"வைஷ்ணவம் நாரதீயஞ் ச ததா பாகவதம் பரம்,
காருடஞ்ச ததா பாத்மம் வாராஹம் சோபநம் ஸ்ம்ருதம்.
ஸாத்விகாநி புராணாநி சோபநாநி சுபாநநே!
ப்ரஹ்மாண்டம் ப்ரஹ்மவைவர்த்தம் மார்க்கண்டேயம் ததைவ ச,
பவிஷ்யத் வாமநம் ப்ராஹ்மம் ராஜஸாநி நிபோத மே,
சைவமாக்நேயகஞ்சைவ லைங்கம் ஸ்காந்தம் ததைவ ச,
கௌர்மஞ்சைவ ததா மாத்ஸ்யம் தாமஸாநி ப்ரசக்ஷதே"

என்னப்பட்டது இவற்றுள் ராஜஸதாமஸங்களைப் பரித்யஜித்து ஸாத்விகங்களையே பரிக்ரஹிக்க வேணுமென்று பாத்வாஜர் சொல்லிவைத்தார்.

"நாத்ரியேத புராணாதீந் ராஜஸாந் தாமஸாந் ததா.
அநீசாநாம் பரேசத்வம் வ்ருதா யத்ரோபவர்ண்யதே" என்று.

"அக்நேச் சிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம்,
ராஜஸேஷு ச கல்பேஷு மாஹாத்ம்யம் ப்ரஹ்மணோ விது:
ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே:"

என்று மாத்ஸ்யத்திலும் சொல்லிற்று. மேலெடுத்த வசனங்களெல்லாம் பூர்வாசார்யோதாஹ்ருதங்கள். "வேதேஷு பௌருஷம் ஸூக்தம் புராணேஷு ச வைஷ்ணவம், பாரதே பகவத்கீதா தர்மசாஸ்த்ரேஷு மாநவம்" என்கிற ப்ரமாண வசனத்தினால் வேதங்களுக்குள் புருஷஸூக்தம் சிறந்ததென்றும், ஸ்ம்ருதிகளுள் மநுஸ்ம்ருதி சிறந்ததென்றும், மஹாபாரதத்தினுள் கீதை சிறந்ததென்றும், புராணங்களுக்குள் ஸ்ரீவிஷ்ணுபுராணம சிறந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது ஆனதுபற்றியே ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்நத்தில் *தத்வேந யச் சிதசிதீச்வர......* இத்யாதி ச்லோகத்தாலே ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்குப் புராணரத்னமென்று திருநாமமிட்டருளினார்.

ஸ்ரீராமாயணப் பகுதி

ஸ்ரீ குஹப்பெருமாள் பெருமை

ஸம்க்ஷேபராமாயணத்தில் (29) "குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம். குஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேந ச ஸீதயா" என்கிற ச்லோகரத்னத்தை யுபஜீவித்து இந்த வுபந்யாஸமெழுதப்படுகிறது. அவாப்தஸமஸ்தகாமனான எம்பெருமான் இவ்விருள் தருமா ஞாலத்திலே வந்து அவதரிக்கைக்கு ஹேதுவை ஸ்ரீகீதையில் *பரித்ராணாய ஸாதூநாமித்யாதி ச்லோகம் சொல்லிவைத்தது. அதை மேலெழப் பாராதே உட்புகுந்து ஆர அமரப்படிந்து குடைந்து மருமத்தை யுணர்ந்த ஆழ்வார்களின் திருவுள்ளத்தையறிந்த ஆசாரியர்களில் தலைவரான ஸ்வாமி யெம்பெருமானார் அருளிச் செய்தவற்றை அந்தரதிகரண ஸ்ரீபாஷ்ய ஸூக்தியைக் கொண்டு நன்கறிந்த கூரத்தாழ்வான். (வரதராஜஸ்தவத்தில்) "ஆச்ரிதஜநாநு ஸமாச்லேஷ்டும் அவதரஸி" என்றார். இது மிகவற்புதம். தன்னைத் தழுவவிரும்பிய பக்தர்களின் மநோரத பூரணத்திற்காக எம்பெருமான் அவதரித்தானென்பது எம்பெருமானாருடைய நிர்வாஹம். பக்தர்களைத் தான் தழுவ விரும்பி அந்த தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக அவதரித்தானென்பது ஆழ்வானுடைய நிர்வாஹம். இதுவன்றோ மேம்பட்டது. தன்னைக் காணவும் கண்டு தொழவும் தழுவவும் பேசவுமாசை கொண்டிருக்கின்ற பக்தர்களின் விடாயைத் தீர்ப்பது ஒரு புறமிருக்க, இவர்களோடு கலந்து பரிமாறித் தன் விடாயைத் தீர்த்துக்கொள்ளவே பகவான் இங்கு வந்துஅவதரிக்கிறானென்கிற சீரியபொருளைவைத்தன்றோஆழ்வான் 'ஆச்ரிதஜநாநு ஸமாச்லேஷ்டும் அவதரஸி' என்றருளிச் செய்தது "பகவானுக்கு விடாயாம்; அதைத் தீர்த்துக் கொள்ள அவதாரமாம்" என்று பரிஹாஸ நிந்தைகளைப் பொழிவார் பலருளரன்றோ? அன்னவர்களுடைய விப்ரதிபத்தியைத் தீர்க்குமிடங்கள் ஸ்ரீராமாயணத்தில் பலவுண்டெனினும் அவற்றுள் தலையானவிடம் குஹஸமாகம ப்ரகரணம். இங்கு *குஹேந ஸஹிதோ ராம:* என்பதனால் பெருமாள் குஹனோடு கூடினாரென்று சொல்லிற்று. இவ்வளவுதான் இங்குச் சொல்ல வேண்டுவது. ஆனால் இவ்வளவோடு நில்லாமல் [லக்ஷ்மணேந ச ஸீதயா] என்றும் சொல்லிற்று. குஹனோடு கூடினவளவேயன்று, இளையபெருமாளோடுங் கூடினார், பிராட்டியோடுங் கூடினாரென்றது பெருமாளோடு கூட இவ்விருவரும் பின்தொடர்ந்து வந்தார்களென்று கீழே சொல்லியாயிற்று. மீண்டு மிங்குச் சொல்வது சர்வித சர்வணமே யாகும். கவிஸார்வபௌமருடைய கவிதைக்கு இக்கொத்தை கூடாது. இங்கு நம்பிள்ளை யருளிச்செய்யும் பொருளாவது, பெருமாள் குஹனோடு சேர்ந்தபின்பே தம்பியோடும் தேவியோடும் சேர்ந்ததாகத் திருவுள்ளம் பற்றினாரென்று. இதை நன்கு நிலைநாட்டும் ஸ்தலமொன்று காட்டுகிறேன். [அதற்கும் வழிகாட்டி நம்பிள்ளையே யாவர்.] *குஹேந ஸஹிதோ ராம:* என்றது. மஹர்ஷியின் வாக்யமே யொழியப் பெருமாளுடைய வாக்யமன்று பெருமாளுடைய வாக்கியமே கேளீர். மேலே ஆரண்ய காண்டத்தில் (19-40) *கதாநு

அஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா, சந்ருக்நேந ச வீரேண த்வயா ச ரகு நந்தந!* என்பது பெருமாளுடைய திருவாக்கு. சித்ரகூடமலைச் சாரலிலே வந்து அமுத மன்ன மென்மொழிகளைச் சொல்லி அகங்குழையச் செய்து திரும்பிப்போன பரதாழ்வானையே நினைந்து நைந்து உள்கரைந்துருகாநின்ற பெருமாள் இளையோனை நோக்கிச் சொல்லுகிற மேற்குறித்த வார்த்தையில் 'பரதனோடும் சத்ருக்னனோடும் மறுபடியும் நான் எப்போது கூடுவேன்?' என்றது யுக்தம். இதற்கு மேல் நான்கா வது பாதத்தில் சொல்லுவதாவது உன்னோடும் எப்போது கூடுவேனென்று. பிரிந் தவர்களோடு எப்போது கூடுவேனென்பது ஸம்பாவிதம். கூடியே யிருப்பவனோடு எப்போது கூடுவேனென்பது ஸம்பாவிதமோ? மதிகலங்கிச் சொல்லுகிற வார்த்தை போலல்லவோ தோன்றுமிது. [த்வயா ச ரகுநந்தந!] என்றவிடத்திலுள்ள சகா ரத்தை அநுக்த ஸமுச்சாயகமாக வைத்து உன்னோடும் பிராட்டியோடும் எப்போது கூடுவேன்? என்பதாகவுரைத்து "பரதாழ்வானோடு கூடியிராமையாலே கூடியிருக் கின்ற ஸீதா ஸௌமித்ரிகளின் ஸாஹித்யமும் அஸத்கல்பமாகத் தோற்றுகை யாலே இங்ஙனே சொல்லலாயிற்று" என்று வியாக்கியானம் செய்தருளினார்கள். இதனால் அடியவர்களோடு கலந்து பரிமாறிக் களிப்பதில் எம்பெருமானுக்குள்ள அவா அபரிமிதமென்பது தெரியவரும். இந்த அவாவைத் தீர்த்துக்கொள்வதற்கே அவதாரம் செய்தருள்வதாக ஆழ்வானருளிச் செய்ததில் அதிவாத சங்கைக்கு இட மில்லை. ப்ரக்ருதத்தில் வனவாஸத்தில் முதன்முதலாக குஹனோடு கலந்து விடாய் தீர்ந்தானென்பது குஹனுக்கு ஏற்றம்.

இஃது ஒன்றேயன்று; மற்றுஞ்சில ஏற்றங்களுங் கேளீர்; குஹனைப்பற்றி வான் மீகி சொல்லும்போது *ராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா* என்கிறார். திருமங்கை யாழ் வாரும் *ஏழையேதலன் கீழ்மகனென்னாதிரங்கி......... உகந்து தோழன் நீ எனக்கு* என்றருளிச் செய்த பாசுரம் ஆச்சரியமானது க்ஷத்ரிய ஜாதியில் ஸூர்யகுலத்தில் இக்ஷ்வாகுவம்சத்தில் சக்ரவர்த்தி திருமகனாய்த் திருவவதரித்து ஸகலைச்வர்ய ஸம் பந்நனும் மஹாபுத்திமானும் பகைவரிடத்தும் அன்பு கொள்பவனுமான இராமபிரான் குஹனை நோக்குங்கால், இவன் இழிவான வேடச்சாதியனென்றும் பகுத்தறிவில்லாத அவிவேகி யென்றும் அச்சாதிக்கு இயல்பான கொடுமையினால் எவ்லாவுயிர்களோடும் பகைமை கொள்பவனென்றும் கண்டு இகழ்ச்சி கொள்ள ப்ராப்தமாயிருக்க, தனது பெருமைக் குணங்களையும் பாராமல் அவனுடன் கலந்து பரிமாறினது பெருமாளுடைய சீலகுணத்தைக் காட்டுவதோடு நில்லாது இத்தகைய சீலகுணத்திற்கு குஹன் இலக்கானனே! யென்று இவனுடைய பெருமையும் இதில் விளங்கும். மேலே விபீஷணாழ்வானைப் பரிக்ரஹித்து அளவளாவும் போது "குகனொடு மைவரானேம் முன்பு" என்கிறார் பெருமாள். (கம்பர்) குஹனிடத்தில் பெருமாளுக்கு ஸஹோதர பாவனைபுமன்றே வுண்டாயிற்று.

இன்னொரு விசேஷம் கேளீர்; குஹனைப் பெருமாள் அங்கீகரித்தவன்று இரவு (பெருமாள்) பள்ளிகொண்டருளா நிற்க, அவருடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்தித் துண்டான பரிவாலே இளைய பெருமாள் கண்ணுறக்கமற்றுக் கையும் வில்லுமாய்

நடையாடும் மதிள் போலே வளையவந்து காத்துக் கொண்டு நிற்கிறார். இப்படி நிற்கும்போது அவரும் ஜ்ஞாதியான முறையாலே பெருமாளுக்கு என்ன தீங்கு விளைப்பரோ வென்று அவர் மேலும் அதிசங்கை கொண்டான் குஹன்; 'ஒரு தம்பி தாயைக் கொண்டு ராஜ்யத்தை வாங்கி, கட்டின காப்பாடே காட்டிலே தள்ளி விட்டான்; இவனு மவனைப்போலே ஒரு தம்பியன்றோ; தனியிடத்திலே இவன் என்ன தீமை செய்வனோ ?! என்று அதிசங்கித்தான். அதனால் என்ன செய்தான் தெரியுமோ? 'இவ் விளையோன் பெருமாளுக்கு ஏதேனுமொரு தீங்கு நினைக்கில் இவனையே தீர்த்துவிடக் கடவோம்' என்று துணிந்து இளையபெருமாள் இட்டவடியிலே அடியிட்டு நின்றான குகன் இவ்விஷயம் ஸ்ரீராமாயணத்தில் எங்குச் சொல்லப்பட்டிருக்கின்றதென்னில், பின்பு பரதாழ்வான் கங்கைக் கரையிலே வந்து சேர்ந்தபோது அவனிடத்துண்டான அதிசங்கையும் தீர்ந்து அவனோடு வ்ருத்த கீர்த்தனம் பண்ணுகிற குஹப்பெருமாள் *நியம்ய ப்ருஷ்டே து தலாங்குளித்ரவாந் சரைஸ் ஸுபூர்ணும் இஷுதிம் பரந்தப:, மஹத் தநுஸ் ஸஜ்யமுபோஹ்ய லக்ஷ்மணோ நிசாமதிஷ்டத் பரிதோஸ்ய கேவலம். ததஸ் த்வஹஞ்ச உத்தமசாப பாணப்ருத் ஸ்திதோபவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண:* என்று சொன்னது காண்க. "இளையபெருமாளை ஸ்ரீகுஹப் பெருமாள் அதிசங்கை பண்ண" என்பது ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தி. "வேலும் வில்லுங்கொண்டு பின் பிறந்தாரைச் சோதித்து" என்பது ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தி. இரண்டிடத்திலும் மணவாளமாமுனிகளின் அத்புத திவ்ய ஸூக்திகளை ஸேவித்து வாழ்மின்.

குஹப்பெருமாளுக்கு மற்றொரு பெருமையும் கேளீர். "ஆசசக்ஷே அத ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:, பரதாய அப்ரமேயாய குஹோ கஹநகோசர:" என்கிறார் வால்மீகி. சுலோக மாரம்பிக்கும் போதே ஆசசக்ஷே என்றது என்ன அழகு! சொல்லுகிறவன் யாவன்? யார்க்குச் சொல்லுகிறான்; யாரைப்பற்றிச் சொல்லுகிறான்? என்ன விஷயம் சொல்லுகிறான் என்று ஆராயவேண்டும். விஷயமேதென்னில்; [லக்ஷ்மணஸ்ய ஸத்பாவம்] உம்முடைய தம்பி லக்ஷ்மணன் கடியன் கொடியனாயிருப்பனென்று பார்த்தேன்; அப்படி யல்லன்; மிக நல்லவனே யென்பது சொன்ன விஷயம். இந்தச் சொல்லுக்கு இலக்கான அவ்விளையோன் எப்படிப்பட்டவன்? [லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:] *பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தன்; தொட்டில் பருவமே பிடித்து ராமப்ரேமைக நிரூபணீயன் யாருக்குச் சொன்னான்? [பரதாய] இன்னார் இன்னார்க்குச் சொல்லுவதென்றொரு நியதியில்லையோ? பரதாழ்வான் எப்படிப்பட்டவர்? [அப்ரமேயாய] பிறரிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவரல்லரே; சொன்னவன் யாவன்? [குஹோ கஹநகோசர:] காட்டில் திரிவானொருவனோ இது சொல்லக் கடவன்? ஏன் சொன்னானென்னில், இக்ஷ்வாகு வம்சயரோடே ஏக குலமானமையாலே சொன்னான் என்று ஆசார்யர்களின் நிர்வாஹம். இதுவன்றோ குஹப்பெருமாள் பெருமை. ... ...

வித்யாதானத்தின் பெருமை

"ஸர்வேப்யோபி ஹி தாநேப்யோ வித்யாதாநம் விசிஷ்யதே"

வித்யாதானம் என்கிற பதமானது இருவகையான பொருளைத் தரும். "கர்த்ருகர்மணோ: க்ருதி" என்பது வியாகரண ஸூத்ரமாகையாலே வித்யாகர்மக

தானமும் வித்யாகர்த்ருகதானமும் பொருளாம். மஹாபலிதானம் என்ருல் மஹாபலி கர்த்ருகதானம். (அதாவது மஹாபலி செய்த தானம்.) என்று பொருள்படும். ஸ்வர்ணதானம் பூமிதானம் என்ருல் தத்கர்மகதானம் [ஸ்வர்ணத்தைக் கொடுப்பது பூமியைக் கொடுப்பது என்ரும்.] இப்படி இரண்டு வகையான பொருள் கூறுவது மேட்டுமடையானதன்று; ஸர்வானுபவஸித்தம். வித்யாகர்மகதான மென்ருல் ப்ர வசநாதிமுகத்தாலே கல்விகற்பிப்பது என்றதாகும் வித்யாகர்த்ருக தானமென்ருல் 'வித்யா ததாதி விநயம்' இத்யாதிப்படியே கல்வியானது தான் பெறுவிக்கும் பேறு சொன்னதாகும். வித்யாதான மஹிமை யென்ருல் வித்யாகர்மக தானத்தைத்தான் பெரும்பாலும் நினைப்பர் அதைப்பற்றி மூன்னம் சில வார்த்தைகள் விஜ்ஞாபிக்கி றேன். தானங்கள் உண்மையில் பலவகைப்பட்டிருக்கின்றன. அன்னதானம் பூமி தானம் வஸ்த்ரதானம் ரஜததானம் ஸ்வர்ணதானம் என்றிப்படி உயர்ந்த தானங்கள் பலவுண்டு. *அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யுமெம்பெருமான் நந்தகோ பாலா!* என்ற திருப்பாவைப் பாசுரம் ப்ரஸித்தம். ஸ்வாமி யாதவாப்யுதயத்தில் அதி சகார வதாந்யமணே: ச்ரியம் வ்யதித கல்பதரோரநுகல்பதாம்* என்று நந்தகோப ருடைய ஔதார்யத்தை அபரிமிதமாகக் கொண்டாடுகிருர். சிந்தாமணிபோல் தானம் செய்தாரென்றும், கல்பவிருக்ஷத்தைக் கீழ்ப்படுத்திஞரென்றும் கொண்டாடினபடி. தானங்களெல்லாவற்றினுள்ளும் அன்னதானம் சிறந்ததென்று பொதுவாகக் கொள் ளப்படும். மற்ற தானங்களில் போதும் என்கிறவார்த்தை வாராது. எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிவாங்கி வைத்துக்கொள்ளவே தோன்றும். அன்னமும் கையிலே கொடுப்பதாஞல் வாங்கி வாங்கி மூட்டைகட்டி வைத்துக்கொள்ளவே தோன்றும். கீழே உட்காரவைத்து இலைபோட்டுப் பரிஷேசனம்பண்ணி உண்ணச்சொல்லிப் பரி மாறிஞல் அப்போது போதும் என்கிறவார்த்தை வந்தேதீரும். இதையிட்டே பெரியார் இதற்கு அலங்காரமென்று பெயரிட்டார்கள்போலும். அலம் என்னப்டண்ணுமது அலங்காரம். இத்தகைய சிறப்புப்பெற்ற அன்னதானமும் மற்றும் எந்த தானமும் வித்யாதானத்திற்கு ஏகதேசமும் ஈடாகாது. மற்றதெல்லாம் சிறிது நாள் உதவிக் கழியும். கல்வி அத்தகையதன்றே. (யஜுஷி) மூன்ருவது காண்டம் முதல் ப்ரச் னத்தில் "மநு: புத்ரேப்யோ தாயம் வ்யபஜத்" என்று தொடங்கி ஒருபாக்கியான மோதப்பட்டுள்ளது. அதாவது, மநுமஹர்ஷி தம்முடைய புத்திரர்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்தார். நாபாநேதிஷ்டனென்கிற ஒருமகன் மட்டும் வேதமோதுவதற்கு வெளியூர் சென்று அங்கே வஸித்துவந்தபடியால் அவனுக்குப் பங்கு வைக்கவில்லை. அவன் ஊர்வந்து சேர்ந்த பிறகு தகப்பஞர் தன்னைமட்டும் விட்டு மற்ற பிள்ளைகளுக் குப் பங்கு பிரித்துக்கொடுத்த செய்தியையறிந்து 'எனக்கு ஏன் பங்கு வைக்கவில்லை' என்று தந்தையைக் கேட்க; அதற்கு அவர் 'உனக்கு நான் பங்கு வைக்காமற்போக வில்லை' என்று சொல்லி "அங்கிரஸ இமே ஸத்ரமாஸதே" என்று தொடங்கிச் செவி யிலே ஒரு வித்யாவிசேஷத்தை உபதேசித்து, அதை உபயோகப்படுத்த வேண்டிய ஸந்தர்ப்பத்தையும் தெரிவித்து அதஞல் நீ தனிகஞவாய் என்று கூறித்தலைக்கட்டிஞர் மேலே ருத்ரனுக்கும் இவனுக்கும் நடந்த உக்திப்ரத்யுக்திகள் இருக்கட்டும். தகப்பஞ ரான மநு இவனுக்குத் தந்த வித்யை இவனுக்கு அநாயாஸ ஜீவஞேபயோகியாயிற்று. ஆகவே வித்யா ப்ரதானம் பண்ணிஞல் அது சாச்வதோபகாரம் செய்தபடியாகும்.

ஒரு மஹாகவி சொன்னான்; ''அங்குஷ்டாக்ரபரீணஹ ஜிஹ்வாக்ராயாஸபீரவ:, ஸர்வாங்கீண பரிக்லேசம் ஸஹந்தே ஹந்த ஸந்ததம்.* கட்டை விரலின் நுனியளவான நாக்கின் நுனியை இளமையில் சிரமப்படுத்த அஞ்சியிருந்தவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஸகல அவயவங்களையும் சிரமப்படுத்தக் கடமைப்பட்டவர்களாவர்கள்—என்பது இந்த ச்லோகத்தின் பொருள்; இதினின்று தேறின கருத்து என்னவென்றால், இளமையில் நாவைச் சிறிது சிரமப்படுத்திக் கல்வி பயின்றுவிட்டால் பிறகு யாவதாயுஷம் ஸுகமாக ஜீவனம் நடத்திக்கொள்ளலாம் அங்ஙனம் கல்வி பயிலாதவர்கள் பிறகு ஜீவிகைக்காகஸகலஅவயவங்களினாலும் சிரமப்படவேண்டியதாகும். தலையாலே மூட்டைகள் சுமந்தும், காலாலே வழிநடந்தும், கையாலே விறகு பிளத்தல் முதலியன செய்தும் ஆகவிப்படிப் பலபல அவயவங்களை சிரமப்படுத்தியே ஜீவிக்க நேரும். ஸ்வல்ப காலம் (நாக்கு என்கிற ஒரு அவயவத்தைச் சிரமப்படுத்தக் கூசுமவர்களுக்கு வாழ்நாள் உள்ளவரையில் இப்படி சிரமப்பட நேர்கின்றபடியால் கல்வி பயில்வதே நலமென்று தெரிவித்தவாறு.

அன்ன வஸ்த்ராதி தானங்களை ஒரு க்ஷணத்தில் செய்துவிடலாம், பெற்றுவிடலாம். வித்யாதானம் ஒரு க்ஷணத்திலோ ஒரு மாஸத்திலோ ஒரு ஸம்வத்ஸரத்திலோ செய்யக்கூடியதன்று; பெறக்கூடியதுமன்று. வேதத்திலிருந்து கீழே காட்டிய உபாக்யானத்தில் நாபாநேதிஷ்டன் பெற்றதுபோல் நாமெல்லாரும் பெற்றுவிட முடியுமா? *விம்சத்யப்தே விச்ருதநாநாவித வித்ய* என்னும்படியான பெருமைதான் நமக்கு வாய்க்க வழிபுண்டோ? கடிகாசதம் அம்மாள் ''அநாராத்ய காளீம் அநாஸ்வாத்ய கௌளீம் விநா மந்த்ரதந்த்ரை:'' என்றாப்போலவும், ''தேவீம் வாசமுபாஸதே ஹி பஹவஸ் ஸாரம் து ஸாரஸ்வதம் ஜாநீதே நிதராம் அஸௌ குருகுலக்லிஷ்டோ முராரி: கவி:'' என்று முராரி சொன்னாப்போலவும் குருகுலத்திலே டலகாலம் தண்டல்லவோ நாநாவித்யைகளைப் பெறவேண்டி யிருக்கின்றது. அதற்கு எத்தனையோ இடையூறுகள் நேரும். 'அநந்தபாரம் பஹுவேதிதவ்யம் அல்பச் ச காலோ டஹவச் ச விக்நா:'' என்றுநின்றதே *தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா* என்று ப்ரஹ்லாதாழ்வான் கூறியபடி இளமையிலிருந்தே கல்வி பயிலவேண்டும் அதற்கு நேரும் பலவகையான அஸௌகர்யங்களைப் போக்கி இன்றியமையாத ஸௌகரியங்களைப்பண்ணி வைத்து, ஸத்வாரகமாகவும் அத்வாரகமாகவும் வித்யாப்ரதானம் செய்தருளும் மஹான்கள் கோரமாதவம் செய்தவர்களென்னத் தட்டுண்டோ?

பெங்களூரிலும் திருவல்லிக்கேணியிலும் உபயவேதாந்த ப்ரவர்த்தநீ என்றும் வேதவேதாந்தவர்த்திநீ என்றும் ஸபைகளை சாச்வத நிதியுடன் ஏற்பாடு செய்வித்து வைதிகவித்யாபிவிருத்தி செய்துவருவதும், ஸ்ரீ பரகாலமடம் ஸ்ரீமதஹோபிலமடம் போன்ற சிலமடங்கள் இங்ஙனமே செய்து வருவதும் போற்றத்தக்கதன்றோ. ''சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலநகாரணம், உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு'' என்கிற ப்ரமாண வசனம் உபதேசம் பெறுவதன் ஆவச்யகதையைத் தெரிவிப்பதற்காகமட்டும் அவதரித்ததேயொழிய சாஸ்த்ரஜ்ஞானம் ஸம்பாதிக்கவேண்டாமென்று விலக்கவந்ததன்று. அறிவில்லாதவர்கள் உபதேசம் பண்ணவும் முடியாது, பெறவும் முடியாது. ''மாயாம் ந ஸேவே பத்ரம் தே ந வ்ருதா

தர்மமாசரே, சுத்தபாவம் கதோ பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்'' என்ற ஸஞ்ஜயருடைய வாக்யத்தை நினைப்பது.

ஆக இவ்வளவும் வித்யாகர்மகதானத்தின் மஹிமையை விஜ்ஞாபித்தேன். இனி வித்யாகர்த்ருக தானத்தின் மஹிமையை விஜ்ஞாபிக்கிறேன். ஆனால் இது தனிப்படச் சொல்லவேண்டியதன்று. வித்யை ஸகல நன்மைகளையும் கொடுக்க வல்லதென்பதுபற்றியே யன்றோ வித்யாதானத்திற்கு மஹிமையுண்டாயிற்று. ''வித்யா ததாதி விநயம் விநயாத் யாதி பாத்ரதாம், பாத்ரத்வாத் தநமாப்நோதி; தநாத் தர்மம் ததஸ் ஸுகம்'' என்கிற வசனத்தினால் வித்யை பண்ணும் தானங்களை யுணரலாம். வித்யை அஹங்காரத்திற்கு ஹேதுவாவது சிலரிடத்தில்; அரை குறையான கல்வி கற்றவர்களே அஹமேவ பண்டித:, அஹமேவ ஸர்வஜ்ஞ: என்று கொக்கரிப்பர்கள். புஷ்கலமான வித்யை படைத்தவர்கள் ''நமந்தி ஸந்தஸ் த்ரைலோக்யாதபி லப்தும் ஸமுந்நதிம்'' என்கிறபடியே தலைவணங்கி யடங்கி யொடுங்கியிருப்பர்கள். பெருமாள் திருச்சித்திரகூடத்திலெழுந்தருளி யிருக்கும்போது மலைச்சாரலில் மலைப்பாம்புகள் கிடக்குமழகைப் பிராட்டிக்குக் கூறுவதாக வைத்துக் கம்பர் பேசுகிறார்—''இடிகொள் வேழத்தை யெயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும், கடியமாசுணம் கற்றறிந்தவரெனவடங்கிச், சடைகொள் சென்னியர் தாழ்விலர்தாம் மிதித்தேறப், படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய்'' என்று. ஒவ்வொரு மலைப் பாம்பும் யானையை விழுங்கவல்லதாம். அத்தகைய மிடுக்குவாய்ந்த அம்மலைப் பாம்புகளானவை முனிவர்கள் மலையிலிருந்து கீழே யிறங்குவதற்கும் மலைமீது ஏறுவதற்கும் பாங்காகப் படியாயிருந்துகொண்டு பரம ஸாதுக்களாய் விளங்குகின்றனவாம்; இப்படி அடக்கத்தோடிருப்பதற்கு உவமைகூற நினைத்து ''கற்றறிந்தவரெனவடங்கி'' என்னப்பட்டது. 'கற்றவர்போல' என்னாது கற்றறிந்தவர்போல' என்றது குறிக்கொள்ளத்தக்கது. 'வித்யைக்கழகு வினயத்தாலே' யென்றறிந்தவர்களென்கை. ஆக, புஷ்கலமான வித்யை வினயத்தைத் தரும்; விநயம் ஸத்பாத்ரத்வத்தைத் தரும்; ஸத்பாத்ரமானவாறே ஸத்காரங்கள் பெறலாகும். அதனால் தர்மருசியுண்டாகும். அதனால் பேரின்பவெள்ளம் பெருகும் இன்னமுமென்னவேண்டும். வித்யாகர்த்ருகதானம் இத்தகைத்தாகையாலே வித்யாகர்மகதானம் மிகச்சிறந்ததாயிற்று.

தேவப்பெருமாள் வைகாசித்திருநாள்

காஞ்சீபுரம் தேவப்பெருமாள் ஸன்னிதியில் 12—4—78ல் கோபுர ஜீர்ணோத்தாரண ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் நிறைவேறின பின்பு பஞ்சபர்வோத்ஸவங்களும் நைமித்திக விசேஷோத்ஸவங்களும் குறையற முன்போல வெளிவீதிப் புறப்பாடுகளுடன் நடைபெற்று வருகின்றன. வையங்கண்ட வைகாசித் திருநாள் 19—5—78 வெள்ளிக்கிழமையன்று த்வஜாரோஹணம், 21—5—78 ஞாயிற்றுக்கிழமையன்று கருடோத்ஸவம். மறுநாள் திங்கட்கிழமையன்று நம்மாழ்வார் சாத்துமுறை. 25—5—78ல் திருத்தேர். பக்த ஜனங்கள் அறியக்கடவர்கள்.

ஸ்ரீவைஷ்ணவதர்சந ஸாரார்த்த ஸம்வாதம்

[ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பிறந்துவைத்தும் இளமை தொடங்கி லௌகிக வ்யாஸங்கத்தினால் ஸம்பிரதாய விஷயங்களை ஒன்று மறியாமே காலங் கழித்துவிட்டு, உத்யோகத்தில் ஓய்வு பெற்றபிறகு *பழுதே பலபகலும் போயின வென்று அநுதாபங்கொண்டு ஸத்விஷயங்களைத் தெரிந்துகொள்ள விருப்பங்கொண்டவர்களுக்கு உதவியாக இக்கட்டுரை எழுதப்படுகிறது. மணவாளனென்கிற ஜிஜ்ஞாஸுவுக்கும் ஆசாரியனுக்கும் ஸம்பாஷணையாக அமைக்கப்படுவது.]

மணவாளன்;— (ஆசார்ய ஸன்னிதானத்தில் தெண்டன் ஸமர்ப்பித்து விஜ்ஞாபிக்கிறான்.) ஸ்வாமிந்! அடியேன் ஜந்மாந்தரஸுக்ருத விசேஷத்தினால் உயர்குலத்திலே பிறந்திருக்கிறேனாகிலும் இளமையே தொடங்கி லௌகிக வியாஸங்கங்களினால் காலங்கழித்துவிட்டேனாதலால் ஸ்வரூபாநுரூபமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவற்றில் ஒன்றும் தெரிந்துகொள்ள அவகாசமில்லாமல் போயிற்று. சிறிது காலம் ஸ்வாமி திருவடிவாரத்தில் வாழ்ந்து ஸ்வரூபஞானம் பெறலாமென்று உத்தேசித்து விடைகொண்டிருக்கிறேன். அடியேனைத் திருத்திப் பணிகொள்ளவேணும்.

ஆசாரியர்;—உனக்கு இவ்வளவு ஆர்த்தி பிறந்ததற்கு மிகவும் மகிழ்கிறேன். நான் சொல்லுகிற விஷயங்களை க்ரஹிப்பதற்குரிய மேதை உனக்கு இருக்கிறதாவென்று நான் பரீக்ஷிக்கவேண்டிய அவசியமில்லை; ஏனென்றால், ஒரு சுலோகம் சொல்லுகிறேன் கேள். *ஆஸ்தா ஸ்வாஸ்த்யே யதி ஸ்யாதாம் மேதயா கிம் ப்ரயோஜநம்?, தே உபே யதி ந ஸ்யாதாம் மேதயா கிம் ப்ரயோஜநம்? என்கிற சுலோகத்தை மனப்பாடம் செய்துகொள். இந்த சுலோகத்தின் கருத்து என்னவென்றால், ஆஸ்தையாவது—ஊக்கம்; ஸ்வாஸ்த்யமாவது—கவலையற்றிருக்கை: இவ்விரண்டும் இருக்குமானால் மேதையைப் பற்றின விசாரம் வேண்டா; இவ்விரண்டும் இல்லையாகில் மேதையிருந்தும் பயனில்லை—என்றபடி. ஆஸ்தையும் ஸ்வாஸ்த்யமும் உனக்கு உண்டா?

மண;—ஸத்விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேணுமென்கிற ருசி யுடைமையாகிற ஆஸ்தை தூண்டத்தானே அடியேன் விடைகொண்டிருக்கிறேன். அதில் குறையில்லை. தேவரீருடைய திருவருளால் மேன்மேலும் ஆஸ்தை அபிவிருத்தியடையுமென்று நம்பியிருக்கிறேன். உப்பு புளி விசாரமற்றிருக்கையே ஸ்வாஸ்த்யமென்று நினைக்கிறேன் அதற்கும் ஒரு குறையில்லை. பெரியோர்கள் ஸம்பாதித்ததும் ஏதோ இருக்கிறது. அடியேனுக்கும் புஷ்கலமாகப் பென்ஷன் கிடைத்துவருகிறது. பிள்ளைகளும் யதோசிதம் ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உதரபோஷணத்திற்காகக் கவலை கொள்ளும்படியான நிலைமையை எம்பெருமான் வைக்கவில்லை. எவ்வளவு காலம் தேவரீர் திருவடிவாரத்தில் இருக்கவேணுமானாலும் இருக்கிறேன். தினப்படி இரண்டு மணிகாலமாவது ஸத்விஷயங்களை ஸாதித்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஆசார்யர்;— இங்கே தேவப்பெருமாள் ஸந்நிதி கீழகோபுர வீதியில் எம்பெருமானார் திருமாளிகை ஆச்சரியமாக ஜீர்ணோத்தாரணமாகி யுள்ளது. நாடோறும்

பிற்பகலில் மூன்று மணியளவுக்கு அவ்விடம் வந்துசேர்; பேரருளாளன் திருவருளாலும், எம்பெருமானாருடைய அநுக்ரஹத்தாலும் விரைவிலேயே ஸ்வரூப ஞானம் பெறுவாய். (அப்படியே உடையவர் திருமாளிகையில் உபதேசம் நடந்து வருகிறது.)

ஆசாரியர்;— நம்முடைய ஸம்பிரதாயத்தில் ரிஷிகள் ஆழ்வார்கள் ஆசாரியர்கள் ஆகிய இவர்களைப்பற்றி முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனாலும் இப்போது எம்பெருமானாருடைய திருநக்ஷத்ரோத்ஸவம் நடந்து கொண்டிருப்பதாலும், நம்முடைய தரிசனத்திற்கு அவரே தலைவராதலாலும் முன்னம் அவரைப்பற்றிச் சொல்லுகிறேன். நான் சொல்லிவரும்போது இடையிடையில் உனக்கு ஏதாவது கேட்கத் தோன்றினால் ஸங்கோசமில்லாமல் கேட்கலாம்.

மணவாளன்;— ஸ்வாமிந்! ஆரம்பத்திலேயே கேட்கிறேன். பேரருளாளன் என்றும் தேவப்பெருமாள் என்றும், எம்பெருமானாரென்றும் உடையரென்றும் தேவரீர் ஸாதித்தருளிற்று. தேவப்பெருமாள் என்பது வரதராஜப்பெருமாளை என்று அறிவேன்; உடையவர் என்பது ராமாநுஜரை என்றறிவேன். பேரருளாளன் எம்பெருமானார் என்னும் சொற்கள் அடியேனுக்குப் புதியனவாயிருப்பதால் விளக்கம் விரும்புகிறேன். இது மிகச் சிறிய ஸந்தேஹம்.

ஆசார்;— பேரருளாளர் என்கிற திருநாமம் தேவப்பெருமாளுடையதே; அருளாளன் என்றுஞ் சொல்லுவதுண்டு; வரதர், வரதராஜர், தென்னத்தியூரர் என்றும் பலதிருநாமங்கள் வழங்குவதுண்டு. உடையவர்க்கு—எம்பெருமானார் ஸ்ரீராமாநுஜர் எதிராசர் இளையாழ்வார் லக்ஷ்மணமுனி, பாஷ்யகாரர் என்றிப்படி பல திருநாமங்களுண்டு. பெரும்பூதூர் மாமுனியென்றுஞ் சொல்லுவதுண்டு. நம்முடைய தர்சனத்தை (அதாவது ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை) பகவத்ராமாநுஜதர்சனமென்றும், எம்பெருமானார் தரிசனமென்றும் வழங்குவர். ஆழ்வார்களில் நம்மாழ்வாரும், ஆசாரியர்களில் ஸ்ரீமந்நாதமுனிகளும் தலைவராயிருக்கச்செய்தேயும், அவர்களிற் காட்டிலும் பிற்பட்டவரான எம்பெருமானாருடைய திருநாமத்தையிட்டு இத்தரிசனத்தை வழங்குவதன் காரணத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில்—*எம்பெருமானார் தரிசனமென்றே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்—அம்புவியோர், இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த அந்தச் செயலறிகைக்கா* என்கிற பாசுரத்தினால் விளக்கியருளினர் இதில் நம்பெருமாளென்றது-ஸ்ரீரங்கநாதனை. அப்பெருமானுடைய நியமனத்தைக் கொண்டே எம்பெருமானார் தரிசனமென்று வழங்கலாயிற்று என்றபடி. அப்பெருமான் அப்படி நியமித்தருள்வதற்கு என்ன காரணமென்ன; *இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த படியை அம்புவியோர் அறிகைக்காக* என்று பாட்டின் பின்னடிகளினால் பணித்தாராயிற்று. வேதாந்ததேசிகனும் *நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேய ப்ரபந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை: இதமகிலதம: கர்ஶநம் தர்ஶநம் ந;* என்றருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு முன்பும் ஸ்ரீவைஷ்ணவர்கள் இல்லாமற் போகவில்லை. இருந்தாலும் அவர்களை நாம் தெரிந்துகொள்ள இயலவில்லை. நாதமுனிகள் தொடங்கியே ஆசார்ய பரம்பரையை அறிகின்றோம். அவர், ந்யாயதத்வமென்றொரு க்ரந்த

மருளிச் செய்திருந்ததாகத் தெரியவருகின்றது. ஆனால் அது நெடுநாளைக்குமுன்னமே கிடைப்பதில்லையாதலால் லுப்தமென்ன வேண்டிற்று. நாதமுனிகளுக்குப் பிறகு உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகள் இருந்தாலும் அவர்கள் க்ரந்தமொன்று மருளிச் செய்திலர். மணக்கால் நம்பிகளின் திருவடிபணிந்த (ஆளவந்தார் என்று ப்ரஸித்தரான) யமுனைத்துறைவர்—யாமுநாசார்யர் கீதார்த்த ஸங்க்ரஹம், ஸித்தித்ரயம் ஆகமப்ராமாண்யம் மஹாபுருஷ நிர்ணயம் முதலான பல க்ரந்தங்கள் பணித்தார் அவருடைய திருவடிகளில் பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான் முதலான பல ஆசிரியர்கள் பணிந்திருந்தாலும், அவர்கள் அர்த்தவிசேஷங்களை உபதேசித்துக் கொண்டு போந்தார்களே யொழிய க்ரந்தமேதும் அருளிச் செய்திலர்.

அவர்களின் அடிபணிந்து *பஞ்சாசார்ய பதாச்ரிதரென்று புகழ்பெற்ற எம்பெருமானுர், வேதார்த்த ஸங்க்ரஹம் ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலான நவநிதிகளென்றும் நவரத்னங்களென்றும் போற்றப்படுகின்ற ஒன்பது க்ரந்தங்களை யருளிச் செய்து இந்த தரிசனத்தை மிக வளர்த்தருளினபடியாலே *த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை:* என்று பணிக்கப்பட்டது.

இத்தரிசனத்தை நவீன மென்று பிறர் சிலர் சொல்லத் தொடங்கினர். அதை மறுத்தருளா நின்ற வேதாந்ததேசிகன் யதிராஜ ஸப்ததியில், *யதிக்ஷ்மாப்ருத் த்ருஷ்டம் மதமிஹ நவீநம் ததபி கிம்* இத்யாதி ச்லோகத்தாலே மறுவாய் திறக்க இடமில்லாதபடி தத்துவத்தை வெளியிட்டருளினர்.

சிஷ்யர்;— ஸ்வாமிந்! அந்த மறுப்பை விவரித்துரைக்கவேணும். ஸ்ரீராமாநுஜ தர்சனம் நவீன மென்பதை வேதாந்த தேசிகன் ஒப்புக்கொண்டு விட்டார் என்று அத்வைதிகள் சொல்லிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேனே; நவீன மென்கிற வாதத்தைக் கண்டித்திருக்கும்படியை ஸாதிக்கவேணும்.

ஆசார்யர்;—ஸ்ரீபாஷ்யம் தொடங்கும் போது "பகவத்போதாயந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே* என்று நம பாஷ்யகாரர் போதாயநாதி மஹர்ஷிகளின் க்ரந்தங்களை யடியொற்றி (ப்ரஹ்ம) ஸூத்ரங்களை அக்ஷரசः: வ்யாக்கியானம் செய்தருள்வதாக ஸ்பஷ்டமாய் அருளிச் செய்திருக்க, அதற்கு புறம்பாக தேசிகன் ஸ்ரீராமாநுஜ தர்சநம் நவீநமென்று ஒப்புக்கொண்டிருக்கிறாரென்பது ஸர்வாத்மநா அஸம்பாவிதம். யதிராஜஸப்ததியில் *யதிக்ஷ்மாப்ருத்த்ருஷ்டம் மதமிஹ நவீநம் ததபி கிம் தத: ப்ராகேவாந்யத் வத ததபி கிம் வர்ணநிகஷே, நிசாம்யந்தாம் யத்வா நிஜமதிதிரஸ்காரவிகமாத் நிராதங்கா: டங்கத்ரமிட குஹதேவப்ரப்ருதய:* என்று கம்பீரமான ச்லோகரத்னமுள்ளது. இந்த ச்லோகத்தின் கருத்தை உள்ளபடி யறியமாட்டாதவர்கள் "ஸ்ரீராமாநுஜதர்சநம் நவீனமென்று சொல்லுகிற நவீனர்களின் வாதத்தை தேசிகன் ஒப்புக்கொண்டுவிட்டார்" என்று சொல்லுவதுண்டு, எழுதி வைத்திருப்பதுமுண்டு; நவீந காலத்தவரான போலஹம் ராமாசாஸ்த்ரியென்பவர் த்ரமிடாத்ரேய தர்சந மென்று தானெழுதினவொரு சுவடியில் எழுதியிருப்பதுண்டு; உடனே அதற்குக் கண்டனமாகக் காஞ்சீபுரம் அண்ணங்கராசாரியர் (யான்) எழுதி

வெளியிட்ட ஶாங்கரஶிரோபூஷா என்கிற க்ரந்தத்திலே அது நன்கு கண்டிக்கப்பட்டுள்ளது.(அதாவது) *யதிக்ஷமாப்ருத்த்ருஷ்டம் மதமிஹ நவீநம்*—என்றதுபூர்வபக்ஷிகளின் வாதத்தை அநுவாதம் செய்தபடி. அதற்கு இரண்டு வகையான ஸமாதானம் மேலே கூறப்படுகிறது. ஶாஸ்த்ரஜ்ஞர்கள் வாதம் புரியும்போது அப்யுபகம்யவாதம் பண்ணுவதென்பது ஒரு புடை; அதற்குமேல், யதார்த்தாவிஷ்கரணம் செய்வது மற்றொரு புடை. அந்த ரீதியில் தேசிகன் (அந்த யதிராஜஸப்ததி ச்லோகத்தில்) முந்துற முன்னம் அப்யுபகம்யவாதம் பண்ணினார்; (அஃது எங்ஙனே யென்னில்;) அப்பா! நீ சொல்லுகிறபடி பகவத்ராமாநுஜதர்ஶநம் நவீனமாகவே யிருக்கட்டும்; உன்னுடைய மதம் புராதநமாகவே யிருக்கட்டும்; அதனாலென்ன? *புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் நசாபி காவ்யம் நவமித்யவத்யம். ஸந்த: பரீக்ஷ்ய அந்யதரத் பஜந்தே மூட: பரப்ரத்யயநேயபுத்தி:* என்கிற காளிதாஸவாக்கு உனக்குத் தெரியுமன்றோ? உபாதேயத்வத்திற்கு ப்ராசீநத்வம் காரணமன்று; பரித்யாஜ்யத்வத்திற்கு நவீநத்வம் காரணமன்று; குணமுள்ளது உபாதேயம்; குணமற்றது த்யாஜ்யம்—என்றுதானே சொல்ல முடியும். ஆகவே, எந்த தர்ஶநத்தில் குணமுள்ளது என்றன்றோ பரீக்ஷிக்க வேண்டும். [ததாத்வே நூதநம் ஸர்வம் ஆயத்யாஞ்ச புராதநம்]. ஆக புராதநத்வ நவீநத்வ வாதம்ஹேயம்—என்று அப்யுபகம்யவாதம் செய்தபடி. அதற்குமேல் [நிஶாம்யந்தாமித்யாதி உத்தரார்த்தத்தினால்] யதார்த்த கீர்த்தனம் பண்ணுகிறார். டங்கத்ரமிடகுஹதேவாதிகளான முன்னோர்களால் தழுவப்பட்ட தரிசனம் இது என்றபடி. ஸ்ரீபாஷ்யோபக்ரமத்தில் "பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:* என்றவிடத்து ச்ருதப்ரகாசிகையில் விளக்கப்பட்டவிஷயமே இது. ராமாநுஜதர்சநம் நவீன மென்கிற வாதத்தை தேசிகன் ஒப்புக்கொண்டாரென்பது தவறான வாதம் என்று தெளியத்தகுவது.

(தொடரும்)

ருக்மிணீ கல்யாணம்

ஸம்ஸாரிகளான நாம் சாஸ்த்ரோக்தங்களான பல ஸம்ஸ்காரங்களினிடையே விவாஹமொன்று செய்துகொள்ளுகிறோம். "இமாம் கந்யாம் தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே" என்று சொல்லிக் கந்யகையை வரிக்கிறோம் எம்பெருமான் ப்ரஜார்த்தமாகப் பாணிக்ரஹணம் செய்துகொள்ள வேண்டியதில்லை; ஜநகசக்ரவர்த்தி ஸீதா பிராட்டியைப் பெருமாளுக்குக் கந்யகாப்ரதானம் பண்ணும்போது "ஸஹதர்மசரீ தவ" என்று சொல்லியிருக்கக் காண்கையாலே 'தர்மப்ரஜார்த்தம்' என்ற இரண்டில் தர்மார்த்தமான விவாஹமே விபவாவதாரங்களில் எம்பெருமான் உகந்தருளினதென்று உணர்க. அந்த தர்மம் எதுவென்றால், *விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல:* என்ற பிராட்டியின் திருவாக்கிலே நோக்காக *ஸர்வாவஸ்த ஸக்ருத்ப்ரபந்ந ஜநதா ஸம்ரக்ஷணைகவ்ரதீ தர்மோ விக்ரஹவாந்* என்று [தசாவதாரஸ்தோத்ரே] ஸ்வாமியருளிச் செய்தபடி சரணாகத பரித்ராணந்தான் தர்மமென்று தேறுகின்றது. *ஸஹதர்மசரீம் சௌரேஸ் ஸம்மந்த்ரிதஜகத்திதாம், அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம்* என்னப்பெற்ற பிராட்டியின் ஸஹயோகமில்லாமல் இந்த தர்மம் நிறைவேறாது. *லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா, ரக்ஷக:*

இத்யாதி ப்ரமாண ப்ரஸித்தியுமுள்ளது. அந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி எம்பெருமானுடைய அவதாரங்கள்தோறும் தானும் வெவ்வேறு திருநாமங்கள் பெற்று அவதரிப்பதாகப் புராணரத்நத்தில் பராசர மஹர்ஷி கூறுகின்றார். (1-9-144) *ராகவத்வேபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி, அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ. தேவத்வே-தேவதேஹோயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ, விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும்.* இத்யாதிகள் காண்க. *அழகியாரிவ் வுலகுமூன்றுக்கும் தேவிமைதகுவார்பலருளர் *என்றும் *தக்கார் பலர் தேவிமார் சால வுடையீர்* என்றும் பராங்குச பரகாலர்கள் பணித்தபடி க்ருஷ்ணாவதாரத்தில் தேவிமார் பலரிருந்தாலும் ருக்மிணிப்பிராட்டிக்கே ப்ராதாந்யமுள்ளது. இப்பிராட்டியின் விவாஹ சரித்திரத்தை நம்மாழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் மூவருமே சிறிது அநுபவித்து வெளியிட்டுள்ளார்கள். *அன்றங்கமர்வென்று உருப்பிணிநங்கை அணிநெடுந்தோள் புணர்ந்தான்* என்பது நம்மாழ்வார் பாசுரம். *உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக்கொண்டு..... *உருப்பிணி நங்கைதன்னை மீட்பான்......* என்பவை பெரியாழ்வார் பாசுரங்கள். *கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான், திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து, அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த பெண்ணாளன்* என்பது ஆண்டாள் பாசுரம்.

இந்த ருக்மிணீ விவாஹ வ்ருத்தாந்தம் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் ஐந்தாவது அம்சத்தில் இருபத்தாறுமத்யாயத்தில் அதிஸம்க்ஷிப்தமாக முடிக்கப்பட்டது. ருக்மிணியைக் கண்ணன் காதலித்திருந்தான். அவளும் கண்ணனைக் காதலித்திருந்தாள். கண்ணன் அவளைத் தனக்குக் கொடுக்கும்படி யாசித்தும் ருக்மிணியின் உடன் பிறந்தவனான ருக்மியானவன் த்வேஷத்தினாலே கண்ணனுக்குக் கொடாமல் சிசுபாலனுக்குக் கொடுப்பதாக வாக்களித்துக் கண்ணாலமும் கோடிக்கப்பட்டது. அப்போது அங்கு சிசுபாலாதிகள் வந்து சேர்ந்தது போல ஸ்ரீ க்ருஷ்ண பலராமாதிகளும் வந்து சேர்ந்தனர். விவாஹத்தின் முன்னாளே கண்ணன் ருக்மிணியைக் கவர்ந்து த்வாரகைக்குத் தேரேற்றிக் கொண்டுபோனான். பிறகு ப்ரபலயுத்தம் நடக்க, வெற்றி பெற்ற கண்ணன் த்வாரகையில் ருக்மிணியை விதிப்படி மணந்து கொண்டான்—என்னுமிவ்வளவே ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் கூறிய கதை. ஹரிவம்சத்தில் விஷ்ணு பர்வத்தில் 59 60 ஆகிய இரண்டு அத்யாயங்களில் இக்கதை சிறிது விரிவாக வருணிக்கப்பட்டது. அதிலும் ருக்மிணீஹரணம் சுருக்கமாகச் சொல்லப்பட்டு பிறகு நடந்த போர் மிக விரிவாக வருணிக்கப்பட்டது.

ஸ்ரீ பாகவத—தசமஸ்கந்தத்தில் (52, 53, 54 அத்யாயங்களில்) இக்கதை விரித்துரைக்கப்பட்டுள்ளது. அதனை ஸம்க்ஷேபித்து விஜ்ஞாபிக்கிறேனிங்கு விதர்ப்ப தேசத்தரசன் பீஷ்மகனென்பவன். அவனுக்கு ஐந்து புத்திரர்களும் ஒரு புத்திரியுமிருந்தனர். அவள்தான் ருக்மிணியென்கிற கடைப்பெண். அவள் இயற்கையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அம்சமாதலாலும், தன் தந்தையைக்காண வருபவர்கள் பலரும் ஸ்ரீக்ருஷ்ண குண சேஷ்டிதங்களை மேம்படச்சொல்லக் கேட்டவளாதலாலும் கண்ணபிரான்மீது மிக்க மயல்கொண்டாள். அவனையே மணந்து கொள்வதாக வுறுதி கொண்டாள். கண்ணனும் ருக்மிணியின் குணாதிசயங்

களைக் கேட்டிருந்து அவளையே நெஞ்சிற்கொண்டனன். இந்த ஸம்பந்தத்தை உற்ற றுறவினரனைவரும் உகந்திருந்தனர். ருக்மியென்கிற தமையன் மட்டும் கண்ணனிடத்துப் பகை கொண்டிருந்ததனால் தங்கையான ருக்மிணியை சிசுபாலனுக்கு மணம் புரிவிக்க எண்ணங்கொண்டான். இதை யறிந்து மிக வருந்தின ருக்மிணி ஆப்தனைவோர் அந்தணனைக் கண்ணனிடம் தூதனுப்ப நினைத்தாள். தன் காதலைக் காட்டும் சில சுலோகங்களைப் பொறித்துப் பத்ரிகையொன்று கொடுத்தனுப்பினாள். அதைப் பெற்றுக்கொண்ட வந்தணன் விரைந்துசென்று த்வாரகாபுரியைச் சேர்ந்து கண்ணபிரானைக்கண்டு பசிதீர்ந்து குசலப்ரச்னங்களெல்லாமான பிறகு ருக்மிணியின் ஸந்தேசத்தை கோப்யமாகக் கொடுத்தனன், ப்ரேமகனமான அப்பத்திரிகையிலிருந்த ஏழு சுலோகங்களையும் கண்ணபிரான் மிகுந்த குதூஹலத்தோடு வாசித்துப்பார்த்து உள்ளம் பூரித்தனன். அந்த ஸப்த ச்லோகியின் ஸாரமான கருத்தாவது, கண்ணா! உனது திருக் குணங்களைச் செவியுற்ற என்னுடைய மனம் நாணமற்று உன் பக்கலில் ஆழ்ந்து கிடக்கின்றது. ஸகல குணங்களும் நிரம்பிய உன்னை எந்தக் குலமகள் தான் விரும்பமாட்டாள்? செந்தாமரைக்கண்ணா! உனக்கே அற்றுத் தீர்ந்த வென்னை வேறொரு க்ஷுத்ரன் தீண்டாதபடி நோக்கிக்கொள்ள வேணும். நான் செய்த பலவகைப் பட்ட ஸுக்ருதங்களினால் பகவான் உகந்திருப்பனாகில் சிசுபாலன் முதலான அற்பர்கள் என்னைத் தீண்டாதொழிய வேணும். நாளை வதுவை மணமென்று நாளிட்டு சிசுபாலனுக்கு என்னைக் கொடுப்பதாக நிச்சயித்திருப்பதால் நீ சேனைகள் சூழ விரைந்து இவ்விடம் ஏகாந்தமாக வந்து எதிரிகளைத் தொலைத்திட்டு என்னைக் கைக்கொள்ளவேணும். அந்தப்புரத்தினுள்ளே யிருக்குமென்னைக் கைக்கொள்வதெங்ஙனமென்று விசாரப்பட வேண்டா; முன்னாள் தேவீ பூஜைக்சென்று ஒரு புறப்பாடுண்டு மணமகளானவெனக்கு; அந்த ஸமயத்தில் என்னைக் கைக்கொள்வது எளிய வுபாயம். எவ்வகையினாலேனும் உன் திருவருளுக்கு நான் இலக்காகாதொழியில் வாழகில்லேன்; நூறு பிறவி பிறந்தாகிலும் உன்னைப் பெற்றே தீருவேன்— என்பதாம். இக் கருத்துக்கொண்ட சுலோகங்களை வாசித்த கண்ணபிரான் ஸந்தேசம் கொணர்ந்த அந்தணனை நோக்கி 'அவளுடைய காதலுக்குக் குறைந்ததன்று என்னுடைய காதல்; ஆனாலும் விரோதி கனத்திருக்கின்றது; இருக்கட்டும்; எப்படியாவது அவளைக் கைக்கொண்டே தீருவேன்' என்று சொல்லிச் சாரதியை யழைத்து விரைவில் தேரைக் கொண்டுவருமாறு கட்டளையிட அப்படியே ரதம் வந்து நின்றது. வந்த அந்தணனுடன் தேரின்மேலேறிப் புறப்பட்டு ஓரிரவில் விதர்ப்பதேசம் வந்து சேர்ந்தாயிற்று. ருக்மிணியின் தந்தை தன்மகனுடைய வாக்குக்கு வசப்பட்டிருந்ததனால்மகளைச் சிசுபாலனுக்குக் கொடுக்கநிச்சயித்துச் சடங்குகளும் செய்தாயிற்று. பாளை கமுகு பரிசுடைப் பந்தல்களும் தோரணாலங்காரங்களும் மற்றும் ஆச்சரியமான அமைப்புகளும் கண்டவிட மெங்கும் கண்களைக் கவருமாறு நிரம்பி யிருந்தன. ருக்மிணிக்கும் உத்தமமான அலங்காரங்களைச் செய்வித்து விவாஹ பூர்வாங்கச் சடங்குகளை யெல்லாம் நிறைவேற்றி யிருக்கையில், சிசுபாலனுடைய தந்தை தன் மகனுக்குச் செய்யவேண்டிய விவாஹ விரதங்களைச் செய்வித்து முடித்துப் பெருங்கூட்டத்துடன் வந்துசேர, பேருவகை கொண்ட விதர்ப்பராஜன் அவர்களை வெவ்வேறு விடுதிகளிலே யிருத்தினான். கண்ணனுக்கு வைரிகளும் சிசுபாலனுக்குத் துணைவர்களுமான

ஸால்வன் ஜராஸந்தன் தந்த வக்ரன் பௌண்ட்ரகன் முதலானார் பலரும் சூழ்மினர். கண்ணன் வந்து பலாத்காரமாக ருக்மிணியைக் கைக்கொள்ளப் போகிறானென்று ஒரு ப்ரவாதம் ஊரில் பரவியிருந்தபடியால் 'அப்படி ஏதேனும் விரோதம் நேருமாகில் போர்மூட்டிப் புடைத்திடுவோம்' என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

இச்செய்தி பலராமன் செவியில் விழ, கண்ணன் ஒருவனாகப் புறப்பட்டுச் சென்றிருப்பதை யறிந்து அதிசங்கித்து, பெருஞ்சேனைகளுடன் புறப்பட்டு உடனே விதர்ப்ப தேசத்திற்கு வந்து சேர்ந்தனன். க்ருஷ்ண பலராமாதிகள் அப்ரகாசமாகவே ஒருபுறமிருந்தனர் ருக்மிணியோ துடிக்கிறாள். லக்ன வேளை நெருங்குவதை நோக்கியும் கண்ணனிடமிருந்து ஒரு செய்தியும் கிடைக்காதது பற்றியும், போகவிட்ட அந்தணனும் மீண்டு வாராதது குறித்தும் எண்ணாதன பலவுமெண்ணிச் சிந்தைக்குள் ஆழ்ந்து துவண்டு கிடக்கிறாள். சுபசகுனங்கள் தோன்றுகின்றன. ஸமயத்தில் கண்ணனாலனுப்பப்பட்ட அந்த அந்தணன் அந்தப்புரத்திலே வந்து ருக்மிணியைக் கண்டு ஸந்தோஷச் செய்தியைத் தெரிவித்துவிலகினான். பலராமனும் கண்ணனும் பரிஜநபரிவாரங்களுடன் விவாஹ மண்டபத்தருகில் வந்துசேர, அவர்களைக் கண்ணாலங் காண வந்தவர்களாக நினைத்த அரசன் அவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைப் பண்ணி விடுதிகளிலே யிருத்தினான். கண்ணபிரான் வந்தனனென்று செவியுற்ற நகரத்தவர்களனைவரும் வந்து கண்ணனுடைய வடிவழகை நோக்கி 'நம்முடைய ருக்மிணிக்கு இவன் கணவனாக வாய்க்கமாட்டானா!' என்று இதுவே பேச்சாக விருந்தனர்.

இப்பால் ருக்மிணி அந்தப்புரத்தினின்று புறப்பட்டு இஷ்டதேவதையைத் தொழுவதற்கு எண்ணிறந்த பரிவாரங்களுடன் வீதியார வருகின்றாள். மத்தளங்கொட்டவும் வரிசங்கம் நின்றூதவும் வாய் நல்லார் நல்ல மறையோதவும் பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தவும் மந்தகதியாக வருகின்றவள் அங்கு நிற்குமரசர்களை யெல்லாம் கடைக்கணிக்கும் வியாஜமாகக் கண்ணனைக்கண்டு காமுற்ற வண்ணமாகவே தேரின்மீது ஏறப்புக, *கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான், திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து. அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்தபெண்ணாளன் பேணுமூர் பேருமரங்கமே* என்று ஆண்டாளருளிச் செய்தபடி அப்பிராட்டியைக் கண்ணன் கவர்ந்துகொண்டு விரோதி வர்க்கங்களைக் கீழங்கெடுத்துத் துவராபதியிற்சென்று சேர்ந்து சாஸ்த்ர விதிப்படி மணம்புரிந்து லக்ஷ்மீபதியாக விளங்கினான்.

இங்கொரு விஜ்ஞாபனம்;—ஸ்வாமி பணித்த யாதவாப்யுதயத்தில் பதினோராம் ஸர்க்கத்தின் முடிவில் பலராமரேவதிகளின் பரிணயத்தைக் கூறித் தலைக்கட்டி, பன்னிரண்டாம் ஸர்க்கத்தில் ருக்மிணீப்ரஸ்தாவம் தொடங்கப்பட்டது. இந்த ஸர்க்கம் பூர்த்தியாகப் பெரும்பாலும் ருக்மிணியின் ஸௌந்தர்ய லாவண்ய வர்ணநப்ரசுரம். அடுத்த பதின்மூன்றும் ஸர்க்கத்தில் கண்ணபிரானெழுந்தருள்வது முதலான சரிதைகள் சொல்லப்படுகின்றன. ருக்மிணீ ஒரு ப்ராஹ்மணனிடம் தூதனுப்பியதாக ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்படுகிற கதையை இதில் ஸ்வாமி யருளிச் செய்யாததனால்

அது ப்ரக்ஷிப்தமாயிருக்குமோவென்று சிலர் சங்கிக்கிறார்கள். அந்த சங்கைவேண்டா (யாதவா—ஸர்க 13. சுலோ. 20ல்) *அஹம் த்வயா தூதமுகேந தூராத் ஸாத்வ்யா ஸமாஹூத இஹோபயாத:* என்பதில் "தூதமுகேந அஹம் த்வயா ஸமாஹூத:" என்றிருப்பது கண்டு தெளிக.

நாச்சியார் திருமொழியில் (9.9.) *பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும் சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ* என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திலும்—"இரண்டவதாரத்தில் இரண்டு பிராட்டிமார்க்கு உதவினது தனக்கொருத்திக்குமே வேண்டும்படியாய்த்து இவள் தசை. சிசுபாலன் ஸ்வயம்வரார்த்தமாக வொருப்பட்ட ஸமயத்தில் புறச்சோலையிலே ஸ்ரீபாஞ்ச ஜந்ய கோஷமானது வந்து தரிப்பித்தது ருக்மிணிப்பிராட்டியை;.. ......" என்கிற ஸ்ரீஸூக்தி யுள்ளது இதையடியொற்றி ஸ்வாமி (யாதவாப்யுதயே—12. ஸ. முடிவு சுலோகத்தில்) ருக்மிணிப்பிராட்டியின் துடிப்பு தவிர்ந்து தரிப்பு உண்டான தற்கான நிமித்தங்களைச் சொல்லுமடைவில் *ப்ரத்யாஸந்நம் ப்ரஹ்ருதசரத் பாஞ்ச ஜந்யப்ரணாத * என்றருளிச் செய்தார் ஸ்ரீ பாகவதத்தில் (10-53-97ல்) *ஏவம் வத்வா: ப்ரதீக்ஷந்த்யா கோவிந்தாகமநம் ந்ருப, வாம ஊருர் புஜோ நேத்ரம் ஆஸ் புரந் ப்ரியபாஷிண:* என்று இவ்வளவே சுபநிமித்தங்களுண்டானதாகச் சொல்லிற்று ஸ்வாமி தேசிகன் *ஊருஸ் ஸவ்யோ நயநகமலம் ப்ரூலதாசாபி தஸ்யா: ப்ராவேபந்த* என்று அந்த சுப சகுனங்களையும் ஸாதித்து, பாஞ்சஜந்ய ப்ரணாதத்தையும் ஸாதித்துத் தலைக்கட்டினார். *அசோகவனத்தில் மாயாசிரஸ்ஸைக் கண்டு கலங்கியிருந்த பிராட்டியை சார்ங்கவில் நாணொலி தரிப்பித்தது கண்ணனெழுந்தருளாமை பற்றிக் கலங்கித் துடித்திருந்த ருக்மிணியைப் *பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலி தரிப்பித்தது—என்று பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்தது. ... ... *

ஸ்ரீ:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே,
ய: ச்ருதிஸ்ம்ருதி ஸூத்ராணாமந்தர்ஜ்வரமசீசமத்.

ஸ்ரீபகவத் பாஷ்யகாரரின் பக்திரூபாபன்ன ஞானப்ரதர்சனம்

(காஞ்சீ கோடிகன்னிகாதானம் பெருங்கட்டூர் **சு. ஸ்ரீநிவாஸ தாதாசாரி**, B.A., L.T.,
36 வாசுதேவபுரம், மதறாஸ்-33)

'பரகத அதிசயாதான இச்சயா உபாதேயத்வம் யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: பர: சேஷீ' என்று சேஷத்வத்திற்கு விளக்கம் ஸாதித்த ஸ்ரீமதாளவந்தாரின் குடல் துடக்குப்பெற்றவடியேன் இப்பிங்களவாண்டிலே ஸ்ரீமத்பகவத்ராமானுஜர்பால் நமக்குள்ள சேஷத்வகாஷ்டைக்கு உறுப்பாய் கப்யாஸ ச்ருதிக்கோர் விளக்கம் யதாமதி எழுதி ஸத்தை பெற முயல்கிறேன்.

சாந்தோக்யோபநிஷத்திலாரம்பத்தில் ப்ரணவத்திற்கு உத்கீதசப்தத்தின் ப்ரதிபாத்யதையைச் சொல்லி 'உத்' என்பது எம்பெருமானின் நாமமென்றும், அவனுதித்ய

மண்டலமத்தியில் ரமணீயமான திருமேனியுடன் 'த்ருச்யதேத்வக்ர்யயா புத்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்சிபி:' என்றுயோகிகளுக்குப் ப்ரத்யக்ஷமென்றும் கூறி 'தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ தஸ்யோ திதிநாம' என்று கூறப்பட்டிருக்கிறது. இதனாலதிதைவதமான உத்கீதோபாஸனம் உபதேசிக்கப்படுகிறது. இதை ஸாம கானத்தால் யாகத்தில் உத்காதா கானம் செய்தல் கர்மாவைத்தடையின்றி விரைவில் பலனளிக்கச் செய்யவல்லது.

இனி கப்யாஸச்ருதி விளக்கமிவ்வாறு: 'எம்பெருமானின் திருக்கண்களிரண்டும் கப்யாஸம், புண்டரீகம் போலுள்ளவை' என்பது தமிழ் மொழி பெயர்ப்பு, உபநிடதங்களுக்கு விளக்கமெழுதிய ஆதிசங்கரபகவத்பாதர், எம்பெருமானின் திருக்கண்களின் சிகப்பு வர்ணத்திற்குக் குரங்குஜகனத்தையும் மற்றதோற்றங்களுக்கு வெண்தாமரையையும் உவமையாக்கினர். ஏனெனில் புண்டரீகம் நிகண்டின்படி வெண்தாமரையைக் குறிக்கும். மேலுமவர் கங்கைக்கரையில் விளக்கம் எழுதிவருகையில் ஓர்கருங்குரங்கை அகஸ்மாத்தாக மரக்கிளையில் பார்த்ததாலேற்பட்ட நிகழ்ச்சி இப்பொருள் கூறிய தென்ற இதிஹாஸமும் சொல்லப்பட்டு வருகிறது. இந்த நீச உவமை அச்லீலம்தான். ஆனால் அபஹத பாப்மத்வாதி குணபூர்ண எம்பெருமானின் பெருமையைக்குறைக்க வல்லதன்று. ஆனாலும் ஞானபக்தி மேலிட்ட பெரியோர்கள் கனவிலும் கௌண உவமையைக் கையாண்டு விளக்கம்கூற நினைக்கமாட்டார்கள். வேறு விதமாய்த் தான் பொருள் கூற முயல்வார்கள். ப்ரஹ்மத்திற்கே அம்சத்தில் ஸ்வரூப விகாரத்தை ஒப்புக் கொண்ட யாதவப்ரகாசர் என்ற அத்வைதகுரு இவ்வாறு அனுவதித்தபோது நம் பாஷ்யகாரர் கண்ணீர் மல்கின வரலாறு ஸர்வவிதிதம்.

தாமே ஆசார்யத்வம் வஹித்து விளக்கம் ஸாதித்தது அதிவிலக்ஷணமானது. 'கப்யாஸம்' என்ற சொல்லை புண்டரீகத்துக்கு அடைமொழியாக்கி (விசேஷணம்) பொருள் கூறுகிறார். இது மிகமிக ரஸகர்ப்பமானது. அவருடைய புத்திகூர்மைக்கும் பக்திமிகுதிக்கும் சிறந்த வெடுத்துக்காட்டு. சபரஸ்வாமீ என்ற பூர்வமீமாம்சகர் ஒரு இஷ்டியை விளக்குமிடத்தில் "தர்பை: த்ருணீதஹரிதை:" என்ற மந்த்ரத்தில் தர்பத்திற்குப் பதிலாக புண்டரீக பதத்தையும் ஹரீதை பதத்திற்குப்பதிலாக ரக்த பதத்தையும் ஊஹித்தல் வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதால் சிகப்புத்தாமரையையே புண்டரீகமென்று கொள்ளத்தட்டில்லை. இனி கப்யாஸம் என்ற அடைமொழி எவ்வாறு பொருந்துமென்பது விசாரணீயம் (1) கம்பிபதீதிகபி:—சூரியன் (தண்ணீரைக் குடித்தலால்) தேந ஆஸ்யதே—அவனால் மலர்ச்சியடைந்த (தாமரைப்பூ.)

"துநோத்யஸௌலோகப்ருதாம் ஸரோகதாம் திஜேதிசாம்போஜததி: ஸரோகதாம்" என்ற கவி வித்வன்மணி வேங்கடாத்வரியின் திருவாக்கு அனுசிந்தநீயம். (2) கம்பிபதீதிகபி: — தாமரைத்தண்டு (தண்ணீரைக் குடித்து வளர்தலால்). தஸ்மின் ஆஸ்தே இதி கப்யாஸம்–அதன் மேலிருக்கும் (தாமரைப்பூ). (3) கே–ஜலத்தில் அப்யாஸ்தே—ஸ்தம்—இருக்கிற (தாமரைப்பூ).

இம்மூன்றுவித பொருத்தமான விளக்கங்களும் தாமரைப்புஷ்பத்தின் சோபாதிசயத்தைப் பெருக்குபவை; இதனால் தார்ஷ்டாந்திகமான எம்பெருமானின் கண்களின் கவர்ச்சி தெளிவு. ஸ்ரீபாஷ்யகாரரிதை யெல்லாம் திருவுள்ளத்தில் கொண்டுதான்

தம் "வேதார்த்த ஸங்க்ரஹம்" என்ற நூலில் 'கம்பீராம்பஸ் ஸமுத்பூதஸம்ம்ருஷ்ட நாளரவிகரவிகஸித புண்டரீகா மலாயதேக்ஷண:' என்று விளக்கம் செய்தது. மிக வாழமுள்ள தண்ணீரில் முளைத்து வளர்ந்து தடித்த தாமரைத் தண்டிலுள்ளதும் (காலையில்) ஸூர்ய கிரணத்தால் மலர்ச்சிபெற்றதுமான தாமரைப் புஷ்பத்தினிதழ்கள் போன்ற வழகையும் விரிவையுமுடைய இருத் திருக்கண்களையுமுடையவன் 'உத்' என்று வழங்கப்படுமெம்பிரான்" என்று தமிழ் மொழி பெயர்ப்புடையதிந்த வாக்யம்.

ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வ ஸத்வ மநோஹர: என்ற திருவடித் திருவாக்கும்

கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்
பெரிய வாயகண்களென்னைப் பேதைமை செய்தனவே

என்ற ஸ்ரீபாணர் பாசுரமும் இப்பாஷ்யகாரரின் விளக்கத்திற்கு மார்க்கதர்சிகளென்று சில பூர்வாசாரியர்கள் பணிப்பர்.

ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாளுக்குப் பிரதி தினமும் கோக்ஷீரம் ஸமர்ப்பித்துவந்த காரணத்தால் 'நம்மம்மாள்' என்றவராலேயே அபிநந்தனம் பண்ணப்பட்ட ஸ்ரீவாத்ஸ்ய வரதாசாரியரென்ற நடாதூரம்மாள் (பிள்ளானின் ப்ரசிஷ்யர், எங்களாழ்வானின் திருவடி, ஸ்ரீமன் நிகமாந்த தேசிகனின் ப்ராசார்யர்) தன் 'தத்வஸாரம்' என்ற நூலில் இவ்வர்த்தங்களையெல்லாம்பத்யங்களாய்ச்சமைத்து இறுதியில்ஸாதித்திருப்பதிவ்வாறு.

"க:சித் ஜல்பதி மர்க்கடஸ்ய ஜகனம் கப்யாஸ மக்ஷ்ணோர்யம்
த்ருஷ்டாந்த: கதமிஷ்யதே பகவத: ஸத்யேபி கத்யந்தரே
ஸாமாநாதிகரண்யமத்ர பதயோ: ப்ராப்யம் குதஸ்த்யஜ்யதே
பத்மம் சேத் விசிநஷ்டி தத்ஸத்ருசிதச்சப்தஸ்து கௌணஸ்தவ"

இதன் கருத்து: —'பின்னப்ரவ்ருத்தி நிமித்தாநாம் பதாநாமேகஸ்மின் விஷயே ப்ரவ்ருத்தி:ஸாமாநாதிகரண்ய மென்றமுறையையொட்டி 'கப்யாஸம்' என்றபதத்தை புண்டரீகத்துக்கு விசேஷணமாக்கி அழகானரீதியில் மிகமிகப் பொருத்தமுள்ள பொருள் கூற வசதியிருக்க வேறுபொருள்கொண்டு கௌணோபமை செய்த பசாரத்திற் கேன் பாத்ரமாக வேண்டும்? என்பதாம். அவ்வாறு செய்த வாதிசங்கரரை 'க:சித்' என்று அனாதரவு தோற்ற குறிப்பிட்டது நம்மாசாரியர்களின் பக்திரூபாபன்ன ஞான முதிர்ச்சியின் விளைவு என்று கொள்ள ப்ராப்தம் ஸ்ரீராமபிரானின் வனவாஸத்திற்குக் காரணமான மந்தரையை வால்மீகி பகவான் குறிப்பிடும் "ஞாதிதாஸீ யதோஜாதா கைகேய்யாஸ் து ஸஹோஷிதா ப்ராஸாதம் சந்த்ரஸங்காசமாருரோஹ யத்ருச்சயா" என்ற பத்யத்தில் 'யதோஜாதா' என்ற சொற்போலாகுக. இது "ஸ்ரீராமானுஜ"னிவிடம் பெறுவதொரு பேருகும். ... ...

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீராம மந்திரம், லோடி ரோடு, புதுடில்லி.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமிகளால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீராமமந்திரத்தில் 17—4—78 முதல் 26—4—78வரை ப்ரம்மோத்ஸ

வம் வெகு சிறப்பாக நடந்தது. பிருந்தாவனத்திலிருந்து ஸ்ரீ. உ. வே. ஜகந்நாதாசாரியார் இந்த வருஷம் உத்ஸவாதிகளை நடத்திவைத்தார். பிரதி தினமும் காலையில் திருமஞ்சனம், மாலையில் திவ்வியப்பிரபந்த ஸேவாகாலம் பெருமாளுக்கு விசேஷ அலங்காரங்களும் நடைபெற்றன. 23—4—78 மாலை ஸ்ரீமதி பிரேமா வரதனும் குமாரி சோபாவரதனும் திவ்வியப்பிரபந்தத்தினின்று அநேக பாசுரங்களைப் பாடினார்கள்.

இந்த ஸந்நிதி ஏற்பட்டு ஏழு வருஷங்களாய்விட்டது. மூலவர் மற்றும் அநேக மூர்த்திகள் தயாராய்விட்டது. புதிய ஆலய நிர்மாண வேலை சீக்கிரமே தொடங்க ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யங்கார் பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பக்தகோடிகள் இதற்கு உதவிசெய்யவேண்டும்.

27—4—1978.

E. வைகுண்டமையங்கார்.

ஸ்ரீகாஞ்சீ-உடையவர் திருமாளிகையில் உபந்யாஸங்கள்

"ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாள்களினும் வாழ்வான நாள் நமக்கு-சித்திரையில் செய்யதிருவாதிரை" என்று கொண்டாடப்படும் சித்திரைத் திருவாதிரை மஹோத்ஸவம் (ஸ்ரீகாஞ்சீபுரியில்) தேவப்பெருமாள் ஸந்நிதியில் 2—5—78 முதல் பத்து நாட்களிலும் இரண்டு வேளைகளிலும் நாலாயிரதிவ்யப்ரபந்த ஸேவையுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது. ....கீழகோபுர வீதியிலுள்ளதும், சென்றவாண்டில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்றதுமான உடையவர் திருமாளிகையில் ஷெ பத்து நாட்களிலும் பகல் 3 மணிமுதலாக ஸ்ரீமதுபயவே. நியாயவேதாந்த வித்வான். திருமலை அனந்தாண்பிள்ளை. அக்காரக்கனி ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமியால் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் •பரர்த்தி: பரமஸ்பஷ்ட:• இத்யாதி திருநாமங்களில் பட்டரருளிச் செய்தபாஷ்யத்தில் (பகவத்குண தர்ப்பணத்தில்) நிர்வஹித்தருளின கட்டளையிலே ஸ்ரீராமாயணார்த்த உபந்யாஸம் நடத்தப்பட்டது. ஸ்ரீபாஷ்ய மூல பாராயணமும் நடத்தப்பட்டது. ... ...

ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானார் மஹோத்ஸவம்

சித்திரையில் செய்யதிருவாதிரையில் திருவவதரித்தருளிய எம்பெருமானாருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திவ்யதேசங்களிலெங்கும் சிறப்புற நடைபெற்றாலும், கோயில் திருமலை, பெருமாள்கோயில் திருநாராயணபுரங்களில் மிகவிசேஷமாக நடைபெற்றாலும் ஸ்வாமியின் திருவவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் நடைபெறுவது அஸாதாரணமென்பதுபற்றிச் சொல்லவேணுமோ? இந்த ஸம்வத்ஸரத்தில் ஷெ உத்ஸவம் நடைபெற்ற வைகரி மிகமிகக் கொண்டாடத்தக்கதாய் அமைந்தது. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. யதீந்த்ரப்ரவண யதிராஜ ஜீயர் ஸ்வாமி இந்த மஹோத்ஸவத்தைக் காலகாலத்தில் நடப்பித்ததும், உத்ஸவஸேவார்த்தமாக எழுந்தருளின ஸ்வாமிகளெல்லார்க்கும் மடத்தில் குறையற விசேஷ ததீயாராதனம் நடப்பித்ததும் கொண்டாடத்தக்கது. பத்துநாளும் அடியேன் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி நியமனத்தினால் அங்கு விடைகொண்டிருந்து நான்காவது திருநாள் முதலாக ஸந்நிதியில் தாயார் ஸந்நிதி திருமுன்பே காயத்ரீ மண்டபத்தில் யதிராஜவிம்ஶதி யுபந்யாஸம் ஸ்ரீ யதிராஜ ஜீயர் ஸ்வாமியின் அக்ராஸனத்தில் விண்ணப்பித்தேன். (ப்ர. அ)